**CC.No.267/2022 (JM.No.II, DHARMAPURI)**

**02.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 6 : திரு. அர்ஜுனன், த/பெ. மாணிக்கம்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் கம்மம்பட்டியில் குடியிருந்து வாட்ச்மேன் வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள இரண்டாம் கையெழுத்து என்னுடையது. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 11.00 மணியளவில் சோளையானூர் காட்டுவளவு, கோனமடுவு காடு விநாயகர் கோவில் அருகே விபத்து நடந்தது தொடர்பாக போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். அதில் நானும், சரவணன் என்பவரும் சாட்சியாக இருந்து கையெழுத்திட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தொப்பூர் காவல் நிலையம் சார்காக வேறு வழக்கிற்காக வந்துள்ளேன். கம்மம்பட்டி கூட்டுறவு வங்கியில் இரவு காவலராக வேலை செய்து வந்தேன். போலீசார் ரோந்து பணி வரும்போது அவர்களுடன் பழக்கம் என்றால் சரிதான். அதனால் வழக்கமாக ஏதாவது வழக்கு என்றால் சாட்சியம் அளிப்பது பழக்கம் என்றால் சரியல்ல. போலீசார் படம் வரைந்ததில் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாட்சி 10 சரவணன் எனது ஊர் பஞ்சாயத்து தலைவர் என்றாலும், காவல் நிலையத்திற்கு அடிக்கடி செல்வார் என்றாலும் சரிதான். சம்பவ இடத்தில் கையொப்பம் இடவில்லை என்றாலும், கூட்டுறவு வங்கியில் கையெழுத்து போட்டுவிட்டு சம்பவ இடத்தில் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.02 17:35:48 +0530